பத்தியை எண்ணிட்டுச் சரியாக நிரல்படுத்தவும்.

## நான் ஒரு மிதவை

| | |
|---|---|
| நான் மலாக்காவில் புகழ்பெற்ற ஒரு தொழிற்சாலையில் பிறந்தேன். அங்கு என்னுடன் ஆயிரக்கணக்கான நண்பர்களும் உருவாக்கப்பட்டனர். முழு உருவம் பெற்ற எங்களை அத்தொழிற்சாலையின் ஊழியர்கள் ஒரு பெட்டிக்குள் அடைத்தனர். பின்னர் எங்களை ஒரு கனவுந்தில் ஏற்றினர். அக்கனவுந்து எங்களைச் சுமந்து கொண்டு பினாங்கு தீவை நோக்கி பயணித்தது. | |
| பல மணி நேரப் பயணத்திற்குப் பின் நாங்கள் பினாங்கு தீவை அடைந்தோம். அங்கு நாங்கள் பல கடைகளுக்கு விநியோகிக்கப்பட்டோம். நான் என் நண்பர்களைப் பிரிந்து பாத்து பிரங்கி எனும் கடற்கரையின் அருகிலுள்ள கடையை வந்தடைந்தேன். அக்கடையின் ஊழியர் ஒருவர் என் மேல் ஐந்து ரிக்கிட் எனும் விலைப்பட்டையை ஒட்டினார். பின்னர் என்னுள் காற்றை நிரப்பி கடையின் நுழைவாயிலில் தொங்கவிட்டார். நாள்கள் கடந்தன. அருகில் இருந்த கடலின் அழகை இரசித்தவாறே என்னை வாங்கப்போவது யாரென வழி மேல் விழி வைத்து காத்திருந்தேன். | |
| நீச்சல் தெரியாத சிறுவர்களின் உற்ற நண்பன் நான். நீரில் குளித்து மகிழ விரும்பும் சிறுவர்கள் என் உதவியை நாடுவர். ஆம், நான் ஒரு மிதவை. நான் நீரில் மிதப்பதால் என்னை மிதவை என்று பொதுவாக அழைப்பர். ஆனால், எனக்கான சிறப்புப் பெயர் சுவான். | |
| பல மணி நேரம் கடலில் உல்லாசமாகக் குளித்துக் கொண்டிருந்த சிவாணி திடீரென கடல் அலையில் சிக்கிக் கொண்டாள். அவளால் கடல் அலை தாக்கத்தின் வேகத்தை எதிர்க்கொள்ள முடியவில்லை. அவள் என் பிடியில் இருந்து மெல்ல தளர ஆரம்பித்தாள். என்னை நம்பி கடலில் இறங்கிய சிவாணி கடலுக்கு இரையாகிவிடுவாளோ என்ற பயத்தில் என் பிடியை மேலும் இறுக்கமாக்கினேன். திடீரென யாரோ என்னைப் பலம் கொண்டு இழுப்பதை உணர்ந்தேன். ஆம், சிவாணியின் அப்பா என்னைப் பலம் கொண்டு இழுத்து சிவாணியைக் காப்பாற்றினார். தன் உயிரைக் காப்பாற்றிய என்னைச் சிவாணி நன்றியோடு பார்த்தாள். அன்று முதல் இன்று வரை அவள் நான் இல்லாமல் கடலில் குளிக்கச் செல்லமாட்டாள். | |
| என்னைப் பெற்றுக் கொண்ட சிவாணி மிகவும் உச்சிக் குளிர்ந்தாள். மறுகணமே என்னைத் தன் உடலில் மாட்டிக் கொண்டு கடல் நீரில் இறங்கினாள். நீச்சல் தெரியாத அவளுக்கு நான் நீரில் மிதக்க கை கொடுத்தேன். அவள் என்னைப் பயன்படுத்தி கடலில் உல்லாசமாகக் குளித்தாள். அவள் நீரில் மூழ்காமல் இருக்க மிகவும் உறுதுணையாக இருந்தேன். | |
| ஒரு நாள் சிவாணி என்ற சிறுமி தன் குடும்பத்தினருடன் அக்கடற்கரைக்கு வந்தாள். தொலைவில் இருந்து அவள் என்னையே நோட்டமிட்டாள். என் அழகு காந்தம் இரும்பைக் கவர்வது போல் அவளைக் கவர்ந்தது. உடனே, கடைக்கு வந்த அவள் தன் அம்மாவிடம் என்னை வாங்கித் தரும்படி ஒற்றைக் காலில் நின்றாள். அவள் அம்மாவும் காசாளரிடம் பணத்தைச் செலுத்தி என்னை வாங்கிக் கொடுத்தார் | |
| வடையைப் போன்ற வட்ட வடிவத்தில் என் உடல் அமைந்திருக்கும். வானவில் போல் நானும் ஏழு வண்ணத்தில் காட்சியளிப்பேன். என் உடல் நொய்வப் பாலால் செய்யப்பட்டது. நான் நீரில் மிதப்பதற்கு ஏதுவாக இருக்க என்னுள் காற்றும் நிரப்பப்பட்டிருக்கும். | |

LIVEWORKSHEETS